FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8313224

1. District : Chennai PS: Chennai City-II Year: FIR No.: 13/AC/2026/CC-II Date: 30.09.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள் 17.00 hrs

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7 & 7A
(ii) Act சட்டம்: (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: r/w 106
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 28/09/26 Date to : Prior to 15.45 Hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 29/09/26 Time : 10.00 Hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Typed
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: O/o. Assistant Engineer (O&M) & Assistant Engineer (O&M) Panaiyur, Injambakkam about 15 kms East.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : A. Jenifer (b) ~~Father's~~/ Husband's Name : Vasanth Stanley
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ~~தந்தை~~/ கணவர் பெயர்
(c) Date / Year of Birth : (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Inspection cell Inspector (g) Address : Circle Revenue Inspector, Alandur Taluk office, Chennai-16.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) P. Prashanth, Commercial Inspector, O/o. AE Injambakkam, Chennai-115.
2) G. Narayanan, Foreman, O/o. AE Injambakkam, Chennai-115.
3) Venkatesan, Assistant Engineer (O&M) Panaiyur, Chennai-115.
4) Subhashree, Assistant Engineer (O&M) Injambakkam, Chennai-115.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

After receiving the approval a case was registered.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed K.S. Nagalakshmi, Inspect. of Police Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

K.S. Nagalakshmi
30/09/26.

15. Date & Time of despatch to the court: 30.09.2026 17.30 Pm
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K.S. NAGALAKSHMI,
Rank: நிலை INSPECTOR OF POLICE, No. எண் .....
CHENNAI CITY - II,
V & AC, CHENNAI-16.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-2-ன் காவல் ஆய்வாளர் K.S.நாகலட்சுமி ஆகிய நான் இன்று 30.09.2026-தேதி மாலை 17.00 மணிக்கு அலுவலகத்தில் பணியிலிருந்தபோது திரு.U.முத்துராசா, காவல் துணை கண்காணிப்பாளர், சென்னை நகரப்பிரிவு-II, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை அவர்கள் சென்னை-115, ஈஞ்சம்பாக்கம், Dr.நஞ்சுண்டராவ் சாலை, 33/11 KV, துணை மின்நிலையம், ஈஞ்சம்பாக்கம் உதவி பொறியாளர் (O&M) மற்றும் பனையூர் உதவி பொறியாளர் (O&M) அலுவலகத்தில் 28.09.2026-ந்தேதி பிற்பகல் 15.45 மணி முதல் இரவு 21.30 மணி வரை மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கையின் செயல்முறைகள் கொண்ட புகாரின் மேல் ஏற்பிசை செய்து நடவடிக்கை எடுக்குமாறு கொடுத்த புகாரினை பெற்று உத்தரவின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த விவரம் பின்வருமாறு அனுப்புநர் A.ஜெனிபா, குறுவட்ட ஆய்வாளர்/ஆய்வுக்குழும ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், ஆலந்தூர், சென்னை-600016. பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு (ம) கண்காணிப்புத்துறை, சென்னை நகரப் பிரிவு-2, ஆலந்தூர், சென்னை-16 செயல்முறை ஆணை எண்.198/Inspn/2026, நாள் 28.09.2026 அய்யா, பொருள்: கூட்டுத் தணிக்கை - இருதுறை கூட்டு திடீர் தணிக்கை - சென்னை - சென்னை-115, ஈஞ்சம்பாக்கம், Dr.நஞ்சுண்டராவ் சாலை, 33/11 KV, துணை மின்நிலையம், ஈஞ்சம்பாக்கம் உதவி பொறியாளர் (O&M) மற்றும் பனையூர் உதவி பொறியாளர் (O&M) அலுவலகத்தில் 28.09.2026 அன்று திடீர் கூட்டு தணிக்கை செய்யப்பட்டது - தணிக்கை நடவடிக்கைகள் - மேல் நடவடிக்கைகாக அனுப்புதல் - தொடர்பாக. பார்வை : சம்பந்தப்பட்ட ஆவணங்கள் சென்னை-115, ஈஞ்சம்பாக்கம், Dr.நஞ்சுண்டராவ் சாலை, 33/11 KV, துணை மின்நிலையம், ஈஞ்சம்பாக்கம் உதவி பொறியாளர் (O&M) மற்றும் பனையூர் உதவி பொறியாளர் (O&M) அலுவலகத்தில் 28.09.2026 மாலை 15.45 மணி முதல் 21.30 மணி வரை அன்று இருதுறை கூட்டுத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. இக்கூட்டுத் தணிக்கையின் போது அலுவலகத்தில் கணக்கில் வராத கைப்பற்றப்பட்ட தொகை ரூ.1,45,100/- (ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பத்தி ஐந்தாயிரத்து நூறு மட்டும்), செயல்முறைகள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் மேல்நடவடிக்கை எடுக்கும்பொருட்டு இன்று 28.09.2026-ந் தேதி காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப் பிரிவு-2, சென்னை-16 அவர்களிடம் தக்க நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்பட்டது. இக்கூட்டுத்தணிக்கை நடவடிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. SdXXXX, குறுவட்ட ஆய்வாளர்/ ஆய்வுக்குழும ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், ஆலந்தூர், சென்னை-600016. 28.09.2026. நகல்:மாவட்ட ஆட்சியர் அவர்கள், சென்னை . தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. சென்னை குறுவட்ட வருவாய் ஆய்வாளர் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப் பிரிவு-2, காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோர் இணைந்து இன்று (28.09.2026) சென்னை-115, ஈஞ்சம்பாக்கம், Dr.நஞ்சுண்டராவ் சாலை, 33/11 KV, துணை மின்நிலையம், ஈஞ்சம்பாக்கம் உதவி

பொறியாளர் (O&M) மற்றும் பனையூர் உதவி பொறியாளர் (O&M) அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை.

இருதுறை கூட்டுத் தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள்	1. திரு.A.ஜெனிபர், குறுவட்ட வருவாய் ஆய்வாளர்/ ஆய்வுக் குழும ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், ஆலந்தூர், சென்னை-16. 2. திரு.U.முத்துராசா, காவல் துணை கண்காணிப்பாளர், சென்னை நகரப் பிரிவு-2, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை-16. 3. திருமதி.K.S.நாகலட்சுமி, காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-2, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை-16.

சென்னை-115, ஈஞ்சம்பாக்கம், டாக்டர்.நஞ்சுண்டராவ் சாலை, 33/11 KV, துணை மின்நிலையம், ஈஞ்சம்பாக்கம் உதவி பொறியாளர் (O&M) மற்றும் பனையூர் உதவி பொறியாளர் அலுவலகத்தில் புதிதாக மின் இணைப்பு பெறுவதற்கும், மின் மீட்டர் பொறுத்துவதற்கும், மின் பழுதுகளை நீக்குவதற்கும் மற்றும் இதர பணிகளுக்கு பொதுமக்கள் மற்றும் நுகர்வோர்களிடமிருந்து மின்வாரிய தொடர்பான பணிகளை செய்ய அதிகளவில் கையூட்டு பெறுவதாக கிடைத்த தகவலின் பேரில் நடைபெற்ற இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை சென்னை, ஆலந்தூர், வட்டாட்சியர் அலுவலகம், குறுவட்ட வருவாய் ஆய்வாளர்/ஆய்வுக் குழும ஆய்வாளர் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப் பிரிவு-2, காவல் துணைக் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் மற்றும் காவல் ஆளிநர்கள் ஆகியோர்கள் இன்று (28.09.2026) பிற்பகல் சுமார் 15.45 மணியளவில் இணைந்து இருதுறை திடீர் கூட்டு தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி சென்னை-115, ஈஞ்சம்பாக்கம், டாக்டர்.நஞ்சுண்டராவ் சாலை, 33/11 KV துணை மின் நிலையம், ஈஞ்சம்பாக்கம் உதவி பொறியாளர் மற்றும் பனையூர் உதவி பொறியாளர் அலுவலகமானது மேற்படி முகவரியில் கிழக்கு மேற்கான சாலையில் ஈஞ்சம்பாக்கம் மீன்மார்க்கெட் மற்றும் ஈஞ்சம்பாக்கம் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு

நடுவில் அமைந்துள்ளது. இக்கட்டிடமானது தெற்குநோக்கி அமைந்துள்ளது. இது தரைதளம் மற்றும் முதல் தளங்களைக்கொண்டு அரசு கட்டிடத்தில் இயங்கி வருகிறது. மேற்சொன்ன அலுவலகத்தின் தரைதளத்தில் துணை மின் நிலையம் அமைந்துள்ளது. முதல்தளத்தில் உள்நுழைந்தவுடன் வலதுபுறத்தில் 5 கவுண்டர்கள் கொண்ட மின்கட்டணம் செலுத்தும் அலுவலகமும், அதனை அடுத்து நிர்வாக பிரிவு அலுவலகம் அமைந்துள்ளது. நிர்வாக பிரிவு அலுவலகத்திற்குள் நுழைந்தவுடன் வலதுபுறத்தில் ஈஞ்சம்பாக்கம் வணிக ஆய்வாளரின் இருக்கையும், அதற்கடுத்து போர்மேன் இருக்கையும் அமைந்துள்ளது. அதற்கு எதிர்திசையில் ஈஞ்சம்பாக்கம் உதவி பொறியாளர் அறை கண்ணாடி தடுப்புடன் அமைந்துள்ளது. அதற்கடுத்து பனையூர் உதவி பொறியாளர் அறை கண்ணாடி தடுப்புடன் அமைந்துள்ளது. அதற்கு எதிர்திசையில் Data Entry Operator இருக்கையும் அதன் இடதுபுறம் பனையூர் வணிக ஆய்வாளர் இருக்கையும் அமைந்துள்ளது.

மேற்படி சென்னை-115, ஈஞ்சம்பாக்கம், டாக்டர்.நஞ்சுண்டராவ் சாலை, 33/11 KV துணை மின் நிலையம், ஈஞ்சம்பாக்கம் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு தணிக்கைக்கு சென்றபோது பனையூர் உதவி செயற்பொறியாளர் திரு.N.வெங்கடேசன் என்பவர் ஆஜரில் இருந்தார். மேலும் ஈஞ்சம்பாக்கம் வணிக ஆய்வாளர் திரு.P.பிரசாந்த், போர்மேன் திரு.G.நாராயணன், DEO திரு.S.தீபக் மற்றும் வருவாய் மேற்பார்வையாளர் திரு.B.தீனதயாளன் ஆகியோர் ஆஜரில் இருந்தனர்.

மேற்படி அலுவலகத்தில் திடீர் கூட்டுத் தணிக்கை ஆய்வுக்குழும ஆய்வாளர் தன்னையும், தன்னுடன் வந்த ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப் பிரிவு-2, காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களையும் மற்றும் அவரது குழுவினரையும் அறிமுகம் செய்து கொண்டு இங்கு இருதுறை கூட்டு தணிக்கை மேற்கொள்ளப்போவதாக தெரிவித்தார். அதனை அடுத்து அலுவலகம் மற்றும் ஆஜரில் இருந்தவர்களை சோதனை செய்ய, ஈஞ்சம்பாக்கம் வணிக ஆய்வாளர் திரு.P.பிரசாந்திடம் பர்சில் இருந்து ரூ.3,600/- மற்றும் அவரது பேண்டின் பின்பாக்கெட்டில் இருந்து ரூ.48,500/- எடுத்து ஆய்வுக்குழும ஆய்வாளர் அவர்களின் முன்னிலையில் ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து ஈஞ்சம்பாக்கம் வணிக ஆய்வாளர் திரு.P.பிரசாந்திடம் கேட்டபோது ரூ.3600/- தனது சொந்த செலவிற்கு கொண்டுவந்த பணம் என்றும், ரூ.48,500/- ஏஜெண்டுகளான திரு.பாண்டியன் மற்றும் திரு.வேல்முருகன் ஆகியோர்களிடம் மின் இணைப்புக்காக பெற்ற பணம் என்றும் கூறினார். மேற்கண்ட பணம் லஞ்சமாக பெற்ற பணம் என்பதால் ஆய்வுக்குழும ஆய்வாளர் அவர்களால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் போர்மேன் திரு.நாராயணன் அவர்களை சோதனை செய்தபோது அவர் தனது பேண்டின் இடது பாக்கெட்டில் இருந்து ரூ.20,000/- எடுத்து ஆய்வுக்குழும ஆய்வாளர் அவர்களின் முன்னிலையில் ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரணை செய்ய, அவர் தனது

மனைவியின் மருத்துவ சிகிச்சைக்காக கொண்டுவந்த பணம் என்று கூறினார். மேலும் மேற்படி வணிக ஆய்வாளர் மற்றும் போர்மேன் அமர்ந்திருந்த இருக்கைகள் மற்றும் அவர்களின் பின்புறத்தில் இருந்த பீரோ மற்றும் அதன் சுற்றுபுறத்தை சோதனை செய்தபோது மேற்படி பீராவின் மேல் பணம் ரூ.44,500/- மற்றும் பீரோவின் பின்புறம் தரையில் ரூ.10,500/-ம் சிதறிக்கிடந்தது. மேற்படி பணம் குறித்து வணிக ஆய்வாளர் திரு.பிரசாந்த் மற்றும் போர்மேன் திரு.நாராயணன் ஆகியோரை விசாரணை செய்ய அப்பணம் குறித்து எதுவும் தெரியாது என கூறியதை அடுத்து மேற்படி கணக்கில் வராத பணம் ரூ.55,000/- (ரூ.44,500/- + ரூ.10,500/-) -த்தை ஆய்வுக்குழும ஆய்வாளர் விசாரணைக்காக கைப்பற்றினார்.

பின்பு அதற்கடுத்து பனையூர் உதவி பொறியாளர் திரு.N.வெங்கடேசன் என்பவரை சோதனை செய்ய அவரது அறைக்கு சென்றபோது அவர் தனது அறையின் ஜன்னல் அருகில் தன்னிடம் கையிலிருந்த பணத்தை தூக்கி எறிந்தார். அந்த பணத்தை கீழே இருந்து எடுத்து வந்து ஆய்வு குழும ஆய்வாளர் அவர்களிடம் ஆஜர் செய்யப்பட்டது. மேற்படி பணத்தை எண்ணிப்பார்த்த போது அதில் மொத்தம் ரூ.5,000/- (ரூ.500x9 + ரூ.200x2 + ரூ.100 x 1) இருந்தது. மேற்படி பணம் குறித்து விசாரணை செய்த போது அது தனது சொந்த பணம் என்றும் விஜிலன்ஸ் போலீசார் என தெரிந்தவுடன் பதற்றத்தில் தூக்கி எறிந்துவிட்டதாக கூறினார். மேலும் அவரிடம் இருந்த பர்சில் பணம் ரூ.3,000/-யை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் தனது செலவிற்காக எடுத்து வந்த பணம் என்று கூறினார். மேற்படி ரூ.5000/- மற்றும் ரூ.3,000/- மொத்த பணம் ரூ.8,000/-ற்கு அவரிடம் எவ்வித ஆவண ஆதாரமும் இல்லாததாலும், அவர் கூறிய காரணம் ஏற்புடையதாக இல்லாத காரணத்தினாலும் அப்பணம் ஆய்வுக்குழும ஆய்வாளர் அவர்களால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் Data Entry Operator (contract staff) திரு.S.தீபக் என்பவரை சோதனை செய்தபோது அவர் தன்னிடமிருந்த பணம் ரூ.500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அவர் தன்னுடைய சொந்த செலவுக்காக எடுத்துவந்த பணம் என்று கூறியதால் அதனை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதற்கடுத்து உள்ள அறையில் அமர்ந்திருந்த வருவாய் மேற்பார்வையாளர் திரு.B.தீனதயாளன் என்பவரை சோதனை செய்தபோது அவர் தன்னிடமிருந்த பணம் ரூ.500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவர் தன்னுடைய சொந்த செலவுக்காக எடுத்துவந்த பணம் என்று கூறியதால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

பின்னர் அதற்கடுத்தாற்போல் உள்ள ஈஞ்சம்பாக்கம் உதவி பொறியாளர் அறைக்கு சென்றபோது உதவி பொறியாளர் திருமதி.சுபத்ரா அவர்கள் ஆஜரில் இல்லை. அதனால் பனையூர் உதவி பொறியாளர் திரு.வெங்கடேசன் என்பவருடன் ஆய்வுக்குழும ஆய்வாளர் அவர்களின் முன்னிலையில் அவரது அறையை சோதனை செய்தபோது, சுபத்ரா அவர்களின் அறையில் இருந்த அவரது மேஜை டிராயரில் ஆவணங்களுக்கு இடையில்

ரூ.500 நோட்டுகள் இருந்தது. அந்த பணத்தை எடுத்து எண்ணப்பார்த்தபோது அதில் 20 எண்ணிக்கை கொண்ட ரூ.500 நோட்டுக்கள் பணம் ரூ.10,000/-ம் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. உதவி பொறியாளர் திருமதி.சுபத்ரா அவர்களுக்கு தொலைபேசி மூலம் தொடர்புக்கொண்டு அவரை அலுவலகம் வருமாறு அழைத்ததன் பேரில் அவர் 16.30 மணிக்கு அலுவலகத்திற்கு ஆஜரானார். AE திருமதி.சுபத்ரா அவர்களிடம் மேற்படி பணம் குறித்து கேட்டபோது தனக்கு அந்த பணம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது எனக் கூறினார். ஆதலால் மேற்படி அவரது மேஜை டிராயில் இருந்து எடுத்த பணம் ரூ.10,000/- சந்தேகத்திற்கிடமான பணமாக இருப்பதால் விசாரணைக்காக ஆய்வுக்குழும ஆய்வாளர் அவர்களால் கைப்பற்றப்பட்டது.

மேலும் மின்வாரிய அலுவலர்களின் வங்கி பரிவர்த்தனைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டபோது போர்மேன் திரு.N.நாராயணன் அவர்களின் 01.03.2026 முதல் 28.09.2026 வரைக்குண்டான வங்கி பரிவர்த்தனையில் ரூ.14,13,100/-ம், பனையூர் உதவி பொறியாளர் திரு.N.வெங்கடேசன் அவர்களின் 01.04.2026 முதல் 28.09.2026 வரைக்குண்டான வங்கி பரிவர்த்தனையில் ரூ.9,41,500/-ம், வணிக ஆய்வாளர் திரு.P.பிரசாந்த் அவர்களின் 01.03.2026 முதல் 28.09.2026 வரைக்குண்டான வங்கி பரிவர்த்தனையில் ரூ.2,85,500/-ம் மற்றும் ஈஞ்சம்பாக்கம் உதவி பொறியாளர் திருமதி.சுபத்ரா அவர்களின் 01.03.2026 முதல் 28.09.2026 வரைக்குண்டான வங்கி பரிவர்த்தனையில் ரூ.65,500/-ம் ஆகிய பரிவர்த்தனைகள் சந்தேகத்திற்கிடமான முறையில் இருப்பதினால் அவர்களின் வங்கி பரிவர்த்தனை விவரங்கள் கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்டு ஆய்வுக்குழும ஆய்வாளர் அவர்களால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி அடையாறு, செயற்பொறியாளர் திரு.A.ராமு அவர்களிடம் தொலைபேசியில் தகவல் தெரிவித்ததன் பேரில் சுமார் 20.30 மணியளவில் மேற்படி அலுவலகத்தில் ஆஜரானார். மேற்படி சோதனை குறித்த விவரம் அவரிடம் தெரிவிக்கப்பட்டது.

மேலும் மேற்படி இருதுறை கூட்டுத்தணிக்கையின்போது சென்னை-115, ஈஞ்சம்பாக்கம், டாக்டர்.நஞ்சுண்டராவ் சாலை, 33/11 KV, துணை மின்நிலையம், ஈஞ்சம்பாக்கம் உதவி பொறியாளர் (O&M) மற்றும் பனையூர் உதவி பொறியாளர் அலுவலகத்தில் ஆய்வுக்குழும ஆய்வாளர் அவர்களின் முன்னிலையில் கீழ்கண்ட நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணத்தின் விவரங்கள் பின்வருமாறு

Sl. No.	Denominations	Amount in Rs.	Remarks
1.	500 x 97 = 48,500 200 x17 = 3,400 100x2 = 200	52,100	வணிக ஆய்வாளர் திரு.பிரசாந்த என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம்,

2.	500 x 40 = 20,000	20,000	போர்மேன் திரு.நாராயணன் என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம்,
3.	500 x 9 = 4,500 200 x 2 = 400 100 x 1 = 100 Total =5,000 500 x 6 = 3,000	8,000	பனையூர் . உதவி பொறியாளர் திரு.வெங்கடேசன் அவர்களின் பர்ஸ் மற்றும் அவரால் வெளியே தூக்கி எறியப்பட்ட பணம்.
4.	500 x 20 = 10,000	10,000	ஈஞ்சம்பாக்கம் உதவி பொறியாளர் திருமதி.சுபத்ரா அவர்களின் மேஜை டிராயரிலிருந்து எடுக்கப்பட்ட கணக்கில் வராத பணம்.
5.	500 x 86=43,000 200 x 6 = 1,200 100x 3 = 300	44,500	ஈஞ்சம்பாக்கம் வணிக ஆய்வாளர் திரு.பிரசாந்த் மற்றும் ஈஞ்சம்பாக்கம் போர்மேன் திரு.நாராயணன் அவர்களின் இருக்கைக்கு பின்புறத்தில் இருந்த பீரோவின் மேல் சிதறிக்கிடந்த பணம்.
6.	500 x 21 = 10,500	10,500	ஈஞ்சம்பாக்கம் வணிக ஆய்வாளர் திரு.பிரசாந்த் மற்றும் ஈஞ்சம்பாக்கம் போர்மேன் திரு.நாராயணன் அவர்களின் இருக்கைக்கு பின்புறத்தில் இருந்த பீரோவின் பின்புறத்தில் தரையில் சிதறிக்கிடந்த பணம்.
	மொத்தம்	**Rs.1,45,100.00**	

மேற்படி சோதனையின் போது மேற்படி அலுவலகத்தின் 2026-ஆண்டு செப்டம்பர் மாத உதவி மின் பொறியாளர், இயக்குதலும் & பாராமரித்தலும் ஈஞ்சம்பாக்கம் மின்பிரிவு வருகை பதிவேடு (5 sheets), உதவி மின் பொறியாளர், இயக்குதலும் & பாராமரித்தலும் பனையூர் மின்பிரிவு வருகை டதிவேடு (5 sheets), Daily Collection Report கணினியில் இருந்து பெறப்பட்ட அறிக்கையின் படி 28.09.2026-ந்தேதி ரூ.1,47,436/- இன்று முழுவதும் வசூல் செய்யப்பட்டு பணம் அரசுக்கு செலுத்தப்பட்டதன் விவரம் அடங்கிய தாள்கள் (2-sheets) ஆகியவைகள் நகல் எடுக்கப்பட்டு, பனையூர் உதவி பொறியாளர் அவர்களிடம் கையொப்பம் பெறப்பட்டு, அடையாறு செயற்பொறியாளர் அவர்களிடம் சான்றொப்பம் பெற்று விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அலுவலர்களின் தினசரி பண கையிருப்பு

பதிவேடு குறித்து உதவி பொறியாளரிடம் கேட்ட போது அந்த பதிவேடு பராமரிக்கப்படுவதில்லை என்று கூறினார். இரு துறை கூட்டு தணிக்கையின் போது மொத்தம் ரூ.1,45,100/- விசாரணைக்கு கைப்பற்றப்பட்டது. இந்த இருதுறை கூட்டுத்தணிக்கை இன்று (28.09.2026) மாலை சுமார் 21.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த இரு துறை கூட்டுத் தணிக்கையின்போது அலுவலக பணிகளுக்கோ, பொது மக்களுக்கோ, உடமைகளுக்கோ எவ்வித பாதிப்புமின்றி உரிய முறையில் முடிக்கப்பட்டது. Sd.xxxx. (A.ஜெனிபர்) குறுவட்ட வருவாய் ஆய்வாளர்/ ஆய்வுக் குழும ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், ஆலந்தூர், சென்னை-16. Sd.xxxx. (U.முத்துராசா) காவல் துணை கண்காணிப்பாளர், சென்னை நகரப் பிரிவு-2, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. Sd.xxxx. (K.S.நாகலட்சுமி) காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-2, ஊ.த.க துறை, சென்னை-16. Sd.xxxx. (A.ராமு) செயற்பொறியாளர், அடையாறு கோட்டம், அடையாறு மின்உற்பத்தி (ம) பகிர்மான கழகம், சென்னை. Sd.xxxx. (N.வெங்கடேசன்) உதவி செயற்பொறியாளர், பனையூர், 33/11 KV துணை மின் நிலையம், ஈஞ்சம்பாக்கம், சென்னை-115. Sd.xxxx. (K.சுபத்ரா) உதவி செயற்பொறியாளர், ஈஞ்சம்பாக்கம், 33/11 KV துணை மின் நிலையம், ஈஞ்சம்பாக்கம், சென்னை-115. Sd.xxxx. (P.பிரசாந்த்) வணிக ஆய்வாளர், ஈஞ்சம்பாக்கம், 33/11 KV துணை மின் நிலையம், ஈஞ்சம்பாக்கம், சென்னை-115. Sd.xxxx. (G.நாராயணன்) போர்மேன், ஈஞ்சம்பாக்கம், 33/11 KV துணை மின் நிலையம், ஈஞ்சம்பாக்கம், சென்னை-115.

Sir, Received the above complaint with enclosures and a case was registered in V&AC, CC-II Detachment Cr.No.13/AC/2026/CC-II U/s Sec 7 & 7A of Prevention of Corruption (Amendment) Act, 2018 r/w 106 of BNSS, 2023 on 30.09.2026 at 17.00 hrs.

The original FIR along with complaint enclosed with Joint Surprise Check Proceedings, Statements, Attested copy of Attendance register and Daily Collection Report of AE, Injambakkam office are submitted before the Hon'ble Principle Sessions District Judge, Chengalpattu and other copies of are submitted to the concerned officers.

K.S.Nagalakshmi 2nd/cc II
30/09/2026

(K.S.NAGALAKSHMI)
INSPECTOR OF POLICE,
CHENNAI CITY-II,
V&AC, CHENNAI-16.